# Press Releases 2026

**21-09-2026**

தினகரன்



## அழகப்பா பல்கலையில்

# ராணுவ பயிற்சிக்கு தனி மையம்

காரைக்குடி, செப்.21: காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக என்சிசி மாணவர்கள் பெங்களூரு 4வதுபட்டாலியன் சென்று சிறப்பு பயிற்சி முடித்து திரும்பியவர்களுக்கு பாராட்டும் நிகழ்ச்சி நடந்தது. பல்கலைக்கழக தேசிய மாணவர் படை அதிகாரி வைரவசுந்தரம் வரவேற்றார். பதிவாளர் முனைவர் செந்தில்ராஜன் முன்னிலை வகித்தார். துணைவேந்தர்(பொ) மூத்த பேராசிரியர் முனைவர் ஜெ.ஜெயகாந்தன் தலைமை வகித்து மாணவர்களை பாராட்டி பேசுகையில்,

அழகப்பா பல்கலைக்கழக தேசிய மாணவர் படை மாணவர்கள் கவின்குமார், ஆதிநாராயணன், சந்தோஷ்குமார் ஆகியோர் பெங்களூரு 4வது பட்டலியனுக்கு சிறப்பு பயிற்சிக்கு தேர்வு பெற்று சென்று வந்துள்ளது பாராட்டக்கூடியது.

முகாமில் அதிகாலை பயிற்சிகள், ராணுவ நவீன உபகரணங்களை கையாளுதல், தலைமை பண்பு மேம்படுத்துதல் உள்பட பல்வேறு பயிற்சி பெற்றுள்ளனர். இந்த சிறப்பு பயிற்சியில் மாணவர்கள் பெற்ற அனுபவங்களை நம் பல்கலைக் கழகத்தில் உள்ள என்சிசி மாணவர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும். அப்போது தான் அவர்களுக்கும் உங்களை போன்று தேர்வு பெற வேண்டும் என்ற எண்ணம் வளரும். தவிர தற்போது உள்ள நவீன திட்டங்கள் அவர்களுக்கும் சென்றடையும்.

நாம் கற்றதை எப்போதும் பிறருக்கும் கற்றுத்தர வேண்டும் என்ற எண்ணத்தை மாணவர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும். இப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் திறன்களை வளர்க்க பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு வருகிறோம். இதன் ஒருபகுதியாக மாணவர்கள் ராணுவத்திற்கு செல்லவேண்டும் என்றால் அதற்கான சிறப்பு பயிற்சிகள் மேற்கொள்வதில் பல்வேறு சிரமம் ஏற்பட்டு வருகிறது.

அதனை போக்கும் வகையில் நம் பல்கலைக்கழக வளாகத்தில் ராணுவத்திற்கு செல்லும் வகையில் சிறப்பு பயிற்சி மையம் விரைவில் துவங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறோம். மத்திய, மாநில அரசுகளின் ஒத்துழைப்போடு விரைவில் இதற்கான பணிகள் துவங்கப்படும். இளைஞர்கள் சமூக பொறுப்புணர்வை வளர்த்துக்கொண்டு நாட்டின் முன்னேற்றத்துக்கு தங்களை அர்ப்பணிக்க வேண்டும் என்றார். துணைவேந்தரின் நேர்முக உதவியாளர் முனைவர் முருகேசன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.



காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் நடந்த நிகழ்ச்சியில் என்சிசியில் சிறப்பு பயிற்சிக்கு சென்று வந்த மாணவர்களை துணைவேந்தர் (பொ) ஜெ.ஜெயகாந்தன் வாழ்த்தினார்.

**20-09-2026**

# சிவகங்கை மாவட்டம்காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகமும், திருச்சி, பிஷப் ஹீபர் கல்லூரியும் இணைந்து "கல்வி, அறிவியல் மற்றும் ஆராய்ச்சி" துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில், ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது!



சிவகங்கை மாவட்டம்காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகமும், திருச்சி, பிஷப் ஹீபர் கல்லூரியும் இணைந்து "கல்வி, அறிவியல் மற்றும் ஆராய்ச்சி" துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில், 16.09.2026 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. அழகப்பா பல்கலைக்கழகத்தின் இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், சார்பில் பேரா.ஜெ. ஜெயகாந்தன், துணைவேந்தர் (பொ.), அவர்களும், பல்கலைக்கழக பதிவாளர்முனைவர். அ.செந்தில்ராஜன் அவர்களும் மற்றும் திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியின் சார்பில் முனைவர் ஜெ.ஜி. ஆர். சத்தியசீலன், முதல்வர் (பொ.), முனைவர் கே. அகிலா, உயிரித் தகவலியல் துறைத் தலைவர் ஆகியோரும் கையெழுத்திட்டனர். இப்புரிந்துணர்வு ஒப்பந்த கையெழுத்து நிகழ்வில் அழகப்பா பல்கலைக்கழகஉயிரித் தகவலியல் துறை பேரா.சஞ்சீவ் குமார் சிங், மற்றும் திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி உயிரித் தகவலியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர். அ. ஷெரின் ரோசிட்டா, அழகப்பா பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் பேரா.ப.வசீகரன் ஆகியோர் உடன் இருந்தனர்.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கம், இரு நிறுவனங்களின் பரஸ்பர கல்வி மற்றும் அறிவியல் சார்ந்த செயல்பாடுகளை மேம்படுத்துவதோடு, அறிவுப் பரிமாற்றம், கூட்டு ஆராய்ச்சி, கல்விசார் கலந்துரையாடல்கள் மற்றும் தொழில்முறை தொடர்புகள் ஆகியவற்றுக்கான சிறந்த வாய்ப்புகளை உருவாக்குவதாகும். இக்கூட்டாண்மையின் மூலம் கூட்டு கல்வி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கிடையேயான கல்வி சார்ந்த தொடர்புகள், அறிவியல் நிபுணத்துவப் பரிமாற்றம் மற்றும் அறிவியல்தொழில்நுட்பத் துறைகளில் உருவாகி வரும் புதிய முன்னேற்றங்கள் குறித்த அறிவு மற்றும் அனுபவப் பகிர்வு ஆகியவற்றை ஊக்குவிக்க இரு நிறுவனங்களும் திட்டமிட்டுள்ளன. மேலும், இரு நிறுவனங்களிலும் கிடைக்கக்கூடிய கல்வி மற்றும் ஆராய்ச்சி சார்ந்த நிபுணத்துவம், ஆய்வக வசதிகள் மற்றும் வளங்களைப் பயன்படுத்தி, ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்கள் பல்துறை சார்ந்த கல்வி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு சாதகமான தளத்தை இப்புரிந்துணர்வு ஏற்படுத்தும்,கல்வி மற்றும் நிறுவன ரீதியான உறவுகளை வலுப்படுத்துவதற்கும், அறிவியல் மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும், அர்த்தமுள்ள ஆராய்ச்சி ஒத்துழைப்புகளை உருவாக்கவும், அறிவுப் பகிர்வை மேம்படுத்தவும், கூட்டு ஆராய்ச்சி முயற்சிகளை ஊக்குவிக்கவும், புதுமை மற்றும் திறன் மேம்பாட்டிற்கான வாய்ப்புகளை உருவாக்கவும் இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் வழிவகுக்கும். இதன் மூலம் இரு நிறுவனங்களின் கல்வி மற்றும் ஆராய்ச்சி சார்ந்த பரஸ்பர நலன்கள் மேம்படும்.

நிர்வாகிகள், கன்டோன்மென்ட் நகரிய நிர்வாகிகள் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



# ஒரு கோடி பனை விதைகளை நடுவுதற்கான ஏற்பாடுகள் அழகப்பா பல்கலை., துணைவேந்தர் (பொ) ஜெ.ஜெயகாந்தன் தகவல்

உரிமை குரல்

காரைக்குடி, செப்.18-

தமிழ்நாடு அரசு நாட்டு நலப்பணித்திட்ட இயக்ககத்தின் சார்பில் வருகிற செப் 24-ம் தேதி தேசிய நாட்டு நலப்பணித்திட்ட நாள் கொண்டாடப்படவுள்ளது. இதனை முன்னிட்டு அழகப்பா பல்கலைக்கழக இணைப்பு மற்றும் உறுப்பு கல்லூரிகளை சேர்ந்த நாட்டு நலப்பணித்திட்ட தொண்டர்கள் அவர்தம் பகுதி சார்ந்த நீர் நிலைகளில் ஒரு கோடி பனை விதைகளை நடும் நெடும் பணி நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை அழகப்பா பல்கலைக்கழக நாட்டு நலப்பணித்திட்டம், தேசிய மாணவர் படை, எக்ஸ்னோரோ, என்.டி.எஸ்.ஓ. கிரின் நீடா சுற்றுச்சூழல் அமைப்பு, அக்னி ஸ்டீல், தினமணி நாளிதழ், காரைக்குடி ரோட்டரி பியர்ல் சங்கம் மற்றும் அழகப்பா பல்கலைக்கழக சமுதாய வானொலி ஆகியன இணைந்து செய்துவருகின்றன.

இதன் ஒரு பகுதியாக நாட்டுநலப்பணித்திட்ட தொண்டர்களிடையே முன்கூட்டியே விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக "ஒரு கோடி பனை விதைகள் நடும் நெடும் பணி" குறித்த விழிப்புணர்வு பதாகைகளை வெளியிடும் நிகழ்வு செப் 17-ம் தேதி அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் (பொ) பேரா.ஜெ.ஜெயகாந்தன் தலைமையில் நடைபெற்றது. பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் அ.செந்தில்ராஜன். தொலைநிலை மற்றும் இணையவழி கல்வி இயக்குநர் பேரா.எ.கண்ணபிரான், சுற்றுலா மற்றும் உணவக மேலாண்மைத் துறைத் தலைவர் (பொ) பேராசிரியை எம்.ஆயிசா மில்லத், தேசிய மாணவர் படை அதிகாரி முனைவர் சி.வைரவசுந்தரம், விரிவாக்கம் மற்றும் சமூக தொடர்பு செயல்பாடுகளின் இயக்குநர் முனைவர் மு.நடராஜன் மற்றும் துணைவேந்தரின் நேர்முக உதவியாளர் முனைவர் ம.முருகேசன் ஆகியோர் உடனிருந்தனர்.



Owned. Print & Published by R.KANNAN. Publis

**16-09-2026**

தினகரன்

3/4

## அண்ணா பிறந்தநாளை முன்னிட்டு

# அழகப்பா பல்கலையில் சிறப்பு சொற்பொழிவு



► காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில், அண்ணா பிறந்தநாள் விழா சிறப்பு சொற்பொழிவு நிகழ்ச்சியில் துணைவேந்தர் (பொ) ஜெயகாந்தன் பேசினார்.

**காரைக்குடி, செப்.16:** காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக பேரறிஞர் அண்ணா ஆய்வு இருக்கை சார்பில், அண்ணா பிறந்நாள் விழா சிறப்புச் சொற்பொழிவு நடந்தது. தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் ராசாராம் வரவேற்றார். சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசர் சுரேஷ்குமார், அண்ணாவும் தமிழும் என்ற தலைப்பில் பேசினார்.

துணைவேந்தர் (பொ) மூத்த பேராசிரியர் முனைவர் ஜெ.ஜெயகாந்தன் தலைமை வகித்து பேசியதாவது: அண்ணா ஒரு அறிவுலகமேதை. தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், தமிழ் இனம், தமிழ்நாடு, தமிழர் பண்பாடு ஆகியவற்றின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டு சிறப்பாக பணியாற்றியவர். அண்ணாவின் உரை வீச்சு, மக்கள் அனைவருடைய உள்ளங்களையும் மிகவும் கவர்ந்தவை. அண்ணா ஒரு மாபெரும் சிந்தனையாளர். அவர் பேசும் போது மக்கள் கேட்டார்கள். அவர் எழுதும்போது மக்கள் சிந்தித்தார்கள். அவர் செயல்பட்டபோது ஒரு தலைமுறையே மாற்றம் கண்டது. மாணவர்கள் மீது அன்பு, அக்கறை கொண்டவர் அண்ணா. மாணவர்களிடையே அவர் ஆற்றிய உரைகள் மாணவர்கள் புத்துணர்ச்சி பெறச் செய்தன.

அண்ணாவின் சிந்தனையை மாணவச் சமுதாயம் பாடமாக ஏற்று அதன் வழி நிற்க வேண்டும். அண்ணாவை அடுத்த தலைமுறை அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். அவர் பொழுது போக்கிற்காக எதையும் எழுதவில்லை. புதிய சமுதாயம் உருவாக்குவதற்காக எழுதினார். பெண்கள் முன்னேற்றத்துக்காக பாடுபட்டார். இத்தகைய சிறப்புக்குரிய அண்ணாவின் எழுத்துக்களை மாணவர்கள் கற்க வேண்டும், அவரின் சிந்தனைகளை பின்பற்ற வேண்டும் என்றார்.

பதிவாளர் முனைவர் செந்தில் ராஜன் தொடக்க உரையாற்றினார். அண்ணா பிறந்தநாளை முன்னிட்டு நடந்த போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. உதவிப் பயிற்றுநர் அருணன் நன்றிகூறினார்.

**13-09-2026**

தினகரன்



## போதைக்கு எதிரான ஓவியம்

# மாணவர்களின் கலைத்திறனுக்கு பாராட்டு




▶ காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் போதை பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு ஓவியங்களை துணைவேந்தர் (பொ) ஜெயகாந்தன் திறந்து வைத்தார்.

**காரைக்குடி, செப்.13:** காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக என்எஸ்எஸ் மற்றும் தன்னார்வ மாணவர்கள் சார்பில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு ஓவியங்கள் வரையப்பட்டு அதனை காட்சிபடுத்தும் நிகழ்ச்சி நடந்தது. விரிவாக்கம் மற்றும் வெளிச்செயல்பாடுகள் நடவடிக்கைகள் மையத்தின் இயக்குநர் முனைவர் மு.நடராஜன் வரவேற்றார்.

பல்கலைக்கழகதுணை வேந்தர் (பொ) மூத்த பேராசிரியர் முனைவர் ஜெ.ஜெயகாந்தன் திறந்து வைத்து பேசுகையில், இளைஞர்களிடையே சுகாதார விழிப்புணர்வு, பொறுப்பான வாழ்க்கை முறை மற்றும் போதைப் பொருட்கள் பயன்பாட்டை தடுப்பது போன்றவை தற்போது மிக அவசர தேவையாக உள்ளது.

நம் பல்கலைக்கழக என்எஸ்எஸ் மற்றும் நுண்கலை மாணவர்கள், தன்னார்வலர்கள் வெளிப்படுத்தியுள்ள விழிப்புணர்வு ஓவியங்கள் மாணவர்களின் அர்ப்பணிப்பையும், கலைத்திறனையும் மிகச் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளதை பாராட்டுகிறோம்.

மாணவர்கள் கைகளால் உருவாக்கிய ஓவியங்களும், சுவரொட்டிகளும் வளாகத்தின் முக்கிய பகுதிகளை உயிரோட்டமிக்க அர்த்தமுள்ள விழிப்புணர்வு மையங்களாக மாற்றியுள்ளன. தமிழ்நாட்டு அரசின் வழிகாட்டுதல்கள் இதன் மூலம் சிறப்பாக நிறைவேற்றப்பட்டுள்ளன. மாணவர்களின் இந்த விழிப்புணர்வு பிரச்சாரத்திற்கு மாணவர்கள்,பேராசிரியர்கள் மற்றும் வளாகத்திற்கு வருகை தரும் பொதுமக்களிடையே உற்சாகமான வரவேற்பை கொடுத்துள்ளது.

இது பார்வையாளர்களை கவரும் வகையில் சமூகப்பொறுப்புணர்வை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. அதிகளவில் மாணவர்கள் கூடும் வளாகப் பகுதிகள், நிர்வாக கட்டிட நுழைவு வாயில், பல்கலைக்கழக 7 மாணவர்கள் விடுதிகள், திறன் மேம்பாட்டு நிறுவன கட்டிட நுழைவு பகுதி, கல்வியியல் கல்லூரி நுழைவு பகுதி, அறிவியல் வளாக நுழைவு பகுதி, மேலாண்மை கட்டிட நுழைவு பகுதி, தொலைநிலை மற்றும் இணையவழிக் கல்வி மைய கட்டி நுழைவுப்பகுதி ஆகிய பகுதிகளில் போதைக்கு எதிரான ஓவியங்கள் மற்றும் செல்பி பாயின்ட் அமைக்கப்பட்டுள்ளது என்றார்.

நிகழ்ச்சியில் பதிவாளர் முனைவர் செந்தில்ராஜன், ஆட்சிக்குழு உறுப்பினர்கள் பேராசிரியர்கள் வேதிராஜன் பாலமுருகன், வசிகரன், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் பேராசிரியர் மு.ஜோதிபாசு, தொலைநிலை மற்றும் இணையவழிக் கல்வி மைய இயக்குநர் பேராசிரியர் கண்ணபிரான் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**12-09-2026**

## காரைக்குடி அழகப்பா பல்கலை கழகத்திற்கு

# ரூ. 1 கோடி நிதி வழங்கிய முன்னாள் மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம்!

## புரிந்துணர்வு உடன்படிக்கை கையெழுத்தானது!!



சிவகங்கை, செப்.12–

சிவகங்கை மாவட்டம்காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் மேணள் மத்திய நிதி அமைச்சர் திரு.ப.சிதம்பரம் அவர்களின் நிதியுதவியுடன் அவர் தம் தந்தையார் பெயரில் ரூ.8 கோடி மதிப்பீட்டில் 2008ஆம் ஆண்டு லெ.சி.த.லெ.பழனியப்பா செட்டியார் நினைவரங்கத்தையும் தனது தாயார் பெயரில் ரூ.12 கோடி மதிப்பீட்டில் 2025ஆம் ஆண்டு லட்சுமி வளர்தமிழ் நூலக கட்டடத்தையும் கட்டி அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு வழங்கியுள்ளார்கள்.

அவ்விரண்டு கட்டடங்களையும் முழுமையாக பராமரிக்கும் வகையில் ரூ.1 கோடியை ஆதாரத் தொகையாக அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு வழங்குவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை 11.09.2026 கையெழுத்தானது.

இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையை அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் (பொ) பேரா.ஜெ.ஜெயகாந்தன் அவர்களும் முன்னாள் மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் பரிமாறிக்கொண்டனர்.

இந்நிகழ்வின் போது பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் அ.செந்தில்ராஜன் மற்றும் தமிழ் துறை தலைவரும் லட்சுமி வளாதமிழ் நூலக இயக்குநருமான பேரா.சு.ராசாராம் உடனிருந்தனர்.

மேலும் ப.சிதம்பரம் அழகப்பா பல்கலைக்கழக நூலகம் மற்றும் தகவல் அறிவியல் துறைக்கான கட்டடம் கட்டுவதற்கான ரூ.1 கோடி நிதியை தனது பாராளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து வழங்கி அக் கட்டடப் பணிகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் திருமதி லட்சுமி வளர்தமிழ் நூலக வளாகத்தில் 13 கிலோ வாட் சோலார் மின் உற்பத்தி நிலையம் அமைத்து அதன் மூலம் அந்த வளாகத்தில் சோலார் விளக்குகள் அமைக்கும் பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

உள்கட்டமைப்பை மேற்குறிப்பிட்ட லெ.சி.த.லெ.பழனியப்பா செட்டியார் நினைவரங்கம், திருமதி லட்சுமி வளர்தமிழ் நூலகம் மற்றும் நூலகம் மற்றும் தகவல் அறிவியல் துறைக்கான கட்டடம் கட்டுவதற்கான நிதி போன்றவற்றைபல்கலைக்கழகத்திற்கு வழங்கி பல்கலைக்கழகத்தின் மேம்படுத்துவதற்கு குறிப்பிடத்தக்க வகையில் தனது பங்களிப்பை வழங்கி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

**12-09-2026**

தினகரன்



என்.ஐ.ஆர்.எப் தர வரிசையில்

# அழகப்பா பல்கலைக்கழகம் தமிழக அளவில் 3வது இடம்

## துணைவேந்தர் ரவி தகவல்



காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் தேசிய கல்வி நிறுவன தரவரிசையில் சிறந்த இடத்தை பெற்றதற்கான சான்றினை துணைவேந்தர் ஜி.ரவியிடம் தரவரிசைப் பிரிவின் இயக்குநர் ஜெயகாந்தன் வழங்கினார். உடன் பதிவாளர் செந்தில்ராஜன் உள்ளார்.

காரைக்குடி, செப். 12: தேசிய கல்வி நிறுவன தரவரிசை அமைப்பு (என்.ஐ.ஆர்.எப்) தரவரிசையில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்குள் 44வது இடம், தமிழ்நாடு அளவில் 3வது இடத்தை பெற்றுள்ளது என துணைவேந்தர் ஜி.ரவி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், மத்திய கல்வி அமைச்சகத்தின் தேசிய கல்வி நிறுவன தரவரிசை அமைப்பு (என்.ஐ.ஆர்.எப்) கடந்த 2016ம் ஆண்டு முதல் பல்கலைக்கழங்களுக்கு இடையேயான தரவரிசையை வெளியிட்டு வருகிறது. இதில் கற்பித்தல் மற்றும் கற்பதற்கான வளங்கள், ஆராய்ச்சி மற்றும் தொழில்முறை பயிற்சி, பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி மாணவர்களின் தேர்வு முடிவுகள், சர்வதேச வெளிப்பாடு மற்றும் உள்கட்டமைப்பு வசதி, கருத்துக் கணிப்புகள் ஆகிய 5 குறிப்பிட்ட பகுதிகளின் மதிப்பீடு செய்து தரவரிசைப்படுத்தி வருகிறது. தவிர ஆராய்ச்சி வெளியீடுகள் அதிகமான மேற்கோள்களையும் கணக்கில் எடுத்துக் கொள்கின்றனர். என்.ஐ.ஆர்.எப் தரவரிசைப் பட்டியலில் கலந்து கொள்வதற்காக பல்கலைக்கழக தரவரிசைப் பிரிவின் இயக்குநர் ஜெயகாந்தன் தலைமையிலான குழுவினர் 2025க்கான தரவுகளை பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகள் மற்றும் நிர்வாக பிரிவுகளிடம் இருந்து சேகரித்து சமர்ப்பித்து இருந்தனர். தற்போது 2025ம் ஆண்டுக்கான வெளியிடப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களுக்குள் இடையேயான என்.ஐ.ஆர்.எப் தரவரிசைப்பட்டியலில் அழகப்பா பல்கலைக்கழகம் அகில இந்திய பல்கலைக்கழங்களுக்குள் 44வது இடம், மாநிலபொதுப்பல்கலைக்கழக தரவரிசையில் 14வது இடம், பொதுப்பிரிவில் 4045 உயர்கல்வி நிறுவனங்களுக்குள் 73வது இடத்தை பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் இருந்து இந்திய உயர் கல்வி நிறுவன தரவரிசை, பல்கலைக்கழக தரவரிசையில் அழகப்பா பல்கலைக்கழகம் 3வது இடத்தை பெற்றுள்ளது. கடந்த 7 ஆண்டுகளாக பல்கலைக்கழக தரவரிசையில் முதல் 50 இடங்களுக்குள்ளும், பொதுப்பிரிவில் 100 இடங்களுக்குள்ளும் அழகப்பா பல்கலைக்கழகம் தரத்தை தக்க வைத்துக்கொண்டு இருக்கிறது. இந்த ஆண்டு தரவரிசையில் 14163 உயர் கல்வி நிறுவனங்கள் வெவ்வேறு பிரிவுகளில் கலந்து கொண்டன. தரவரிசையில் சிறந்த இடம் பெற செய்த பேராசிரியர்கள், ஆராய்ச்சி மற்றும் முதுகலை மாணவர்கள், அலுவலர்களை பாராட்டுகிறோம் என்றார்.

தினகரன்



## அழகப்பா பல்கலையில்

# ஆசிரியர் தின விழா

காரைக்குடி, செப்.9: காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் ஆசிரியர் தின விழா கொண்டாடப்பட்டது. பதிவாளர் முனைவர் செந்தில்ராஜன் வரவேற்றார். பல்கலைக்கழக துணைவேந்தர் (பொ) மூத்த பேராசிரியர் முனைவர் ஜெ.ஜெயகாந்தன் தலைமைவகித்து பேசுகையில், தொடக்கப்பள்ளி முதல் உயர்கல்வி வரை வழிகாட்டியாக இருந்த அனைத்து ஆசிரியர்களையும் நன்றியுடன் நினைத்துப்பார்க்க வேண்டும்.



▶ காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் நடந்த ஆசிரியர் தின விழாவில் துணைவேந்தர் (பொ) ஜெயகாந்தனுக்கு, முன்னாள் துணைவேந்தர் ஜி.ரவி விருது வழங்கினார்.

ஆசிரியர் இல்லையென்றால் கட்டுக்கோப்பான சமுதாயம் அமையாது. ஆசிரியர் என்பவர் இறைவனுக்கு சமமானவர். கட்டிடங்கள் பல்கலைக்கழகத்தை உருவாக்குவது இல்லை. ஆசிரியர்கள் தான் உருவாக்குகிறார்கள். ஒரு ஆசிரியர் வகுப்பறையில் பாடம் நடத்துவது இல்லை.

ஒரு தலைமுறையை வடிவமைக்கிறார். கூகுல் தகவல் தரும், ஏ.ஐ பதில் தரும். ஆனால் ஒரு ஆசிரியரால் மட்டுமே ஞானம், ஒழுக்கம், கேள்வி கேட்டுக்கும் துணிச்சலை தர முடியும். தொழில்நுட்ப வளர்ச்சியை கற்பித்தலுக்கான கருவியாக பயன்படுத்த வேண்டும். தேர்வில் வெற்றி பெறும் போது மாணவர்கள் மகிழ்கிறார்கள். ஆனால் ஒரு மாணவர் வாழ்க்கையில் வெற்றி பெறும் போது, ஒரு ஆசிரியர்க்கு இரட்டிப்பு மகிழ்ச்சி ஏற்படுகிறது. ஆசிரியர் பணி என்பது தன்னமற்ற பணி. கல்வி நிறுவனங்கள் மதிப்பெண்களை மட்டும் தரும் இடமாக இல்லாமல் வேலைவாய்ப்பையும், வாழ்க்கைக்கான திறனை தரும் இடமாக மாற வேண்டும். அதற்கு ஆசிரியர்களின் ஒத்துழைப்பு அவசியம். இப்பல்கலைக் கழகத்தின் உயர்வுக்கு அனைவரும் ஒருங்கிணைந்து பாடுபடுவோம் என்றார்.

முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் ஜி.ரவி பேசுகையில், நமது பல்கலைக்கழகம் பெற்றுள்ள அனைத்து தரங்கள் மற்றும் விருதுகளை தக்க வைத்து கொள்வதற்கும் மேலும் உலக அளவில் உயரிய தரத்தை அடைய பேராசிரியர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களிடம் அன்பு செலுத்த வேண்டும். அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்ய வேண்டும், அவர்கள் வாழ்வில் உயர துணை நிற்க வேண்டும் என்றார்.

சிவகாசி, அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி முன்னாள் ஆங்கிலத்துறை தலைவர் பேராசிரியர் ராமச்சந்திரன் சிறப்புரையாற்றினார். 2025 - 2026ம் கல்வியாண்டில் ஆராய்ச்சியில் சிறந்து விளங்கிய பேராசிரியர்களுக்கு சான்றிதழ் மற்றும் ரொக்கப்பரிசு வழங்கப்பட்டது. தேர்வணையர் பேராசிரியர் ஜோதிபாசு நன்றி கூறினார்.

**06-09-2026**

குறிப்பாக பொதுமக்கள் தங்கள் குழந்தைகளை சல்யூட்.(வாழ்த்துக்கள்)




# அழகப்பா மாதிரி பள்ளி மாணவர் மாநில அளவில் பதக்கம் வென்று, தேசிய அளவிலான போட்டிக்கு தகுதி

## துணைவேந்தர் (பொறு) ஜெ. ஜெயகாந்தன் பாராட்டு

காரைக்குடி, செப்.06- தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் விளையாட்டு சங்கம் மற்றும் இளைஞர் இந்தியன்ஸ் மாமதுரை 2.5 இணைந்து நடத்திய மாநில அளவிலான தடகள போட்டிகள் மதுரை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இதில் அழகப்பா மாதிரி மேல்நிலைப்பள்ளி மாணவர் ஹரிகரன் போட்டியில் பங்கேற்று குண்டு ஏறிதல், வட்டு எறிதல் என இரண்டு போட்டிகளிலும் முதலிடம் பெற்று தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார். மேலும் உத்தரகாண்ட் மாநிலத்தில் நடைபெறவுள்ள தேசிய அளவிலான தடகள சாம்பியன்ஷிப் போட்டிகளில் விளையாட தகுதி பெற்றுள்ளார். மாணவரை அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் (பொறுப்பு) மற்றும் அழகப்பா மாதிரி பள்ளி குழு தலைவர், பேராசிரியர் ஜெ.ஜெயகாந்தன், பல்கலை பதிவாளர், பள்ளி குழு செயலர் பேராசிரியர் செந்தில் ராஜன் ஆகியோர் பாராட்டினர். பள்ளி தலைமை ஆசிரியர் முனைவர் ரமேஷ், உதவி தலைமை ஆசிரியை சண்முகசுந்தரி, உடற்கல்வி இயக்குனர் முத்து கண்ணன் உடற்கல்வி ஆசிரியர் ரத்தினராஜா மற்றும் ஆசிரியர்கள் அலுவலர்கள் அழகப்பா மாதிரி ஹாக்கி கிளப் வீரர்கள் மற்றும் பள்ளி மாணவர்கள், பெற்றோர் ஆசிரியர் கழகம் ஆகியோர் தேசிய அளவிலான போட்டியில் வெற்றி பெற வாழ்த்து தெரிவித்தனர்.



**04-09-2026**

# கல்வி முறையில் மாற்றுத்திறனாளி மாணவர்களை ஒருங்கிணைத்து செயல்படுவதற்கு ஊக்குவிக்க வேண்டும்

## அழகப்பா பல்கலை., துணைவேந்தர் (பொ) ஜெ.ஜெயகாந்தன் பேச்சு



காரைக்குடி, செப். 04-

காரைக்குடி, அழகப்பா பல்கலைக்கழக சிறப்புக் கல்வி மற்றும் புனர்வாழ்வு அறிவியல் துறை மற்றும் விஷன் எம்பவர் பெங்களூர் ஆகியன இணைந்து, இந்திய மறுவாழ்வு பேரவையின் அங்கீகாரத்துடன் மண்டல அளவிலான "பார்வைக் குறைபாடுடைய மாணவர்களுக்கான அணுகத்தக்க அறிவியல், தொழில் நுட்பம், பொறியியல், கலை மற்றும் கணிதம் ஆகியவற்றை உள்ளடக்கிய (STEAM) கல்வி உத்திகள்" எனும் தலைப்பிலான இரண்டு நாள் பயிலரங்கத்தின் துவக்க விழா அழகப்பா பல்கலைக்கழக திருமதி லட்சுமி வளர்தமிழ் நூலகத்தின் உள் கருத்தரங்க கூடத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் (பொ) மூத்த பேராசிரியர் ஜெ. ஜெயகாந்தன் தலைமை வகித்து பேசுகையில்: பார்வைக் குறைபாடுடைய மாணவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி மாணவர்களை கல்வி அமைப்பில் எவ்வாறு தகவமைத்து கல்வி வாய்ப்புகள் வழங்க வேண்டும் என்றும், உள்ளடங்கிய கல்வி முறையின் முக்கியத்துவத்தை பற்றியும், அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கலை மற்றும் கணிதம் ஆகியவற்றை உள்ளடக்கிய கல்வி முறையில் மாற்றுத்திறனாளி மாணவர்களை ஒருங்கிணைத்து செயல்படுவதற்கு ஊக்குவிக்க வேண்டும் என வலியுறுத்தியும், மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு கல்வி மட்டுமன்றி அன்றாட வாழ்க்கைக்கு தேவையான சுயதொழில் திறன்கள், தகவல் தொடர்பு மற்றும் சமூக பழக்க வழக்கங்கள் போன்ற வாழ்வியல் திறன்களும் அழகப்பா பல்கலைக்கழக சிறப்பு கல்வியியல் மற்றும் மறுவாழ்வு அறிவியல் துறையின் வாயிலாக கற்றுக் கொடுக்கப்படுகிறது. மாற்றுத்திறனாளி குழந்தைகளை கையாளுவதற்கென பிரத்யேக பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கற்பித்தலில் ஈடுபடுத்தப்படுத்தப்பட்டு, மாற்றுத்திறனாளி குழந்தைகளின் படைப்பாற்றல் மற்றும் அறிவாற்றல் மேம்படுத்தப்படுகிறது என கூறினார்.

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் உயர்கல்வி (மகளிர்) நிறுவனத்தின் சிறப்புக் கல்வித் துறைத் தலைவரும், தேர்வுக் கட்டுப்பாட்டாளர் (பொ) வகிக்கும் முனைவர் கே. சம்பத் ராணி சிறப்புரையாற்றினார். அழகப்பா பல்கலைக்கழக கல்வியியல் புல முதன்மையர் மற்றும் கல்வியியல் துறை தலைவர், பேரா. ஜி. கலையரசன் மற்றும், விசன் எம்பவர் நிறுவனத்தின் தமிழ்நாடு மாநில ஒருங்கிணைப்பாளர் ராஜேஸ்வரி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இப்பயிலரங்கில் பார்வைக் குறைபாடுடைய மாணவர்களுக்கு அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கலை மற்றும் கணிதம்) சார்ந்த கல்வியை அணுகத்தக்க மற்றும் உள்ளடக்கிய முறையில் வழங்குவதற்கான பல்வேறு கற்பித்தல் உத்திகள், தொழில்நுட்பங்கள் மற்றும் நடைமுறை அணுகுமுறைகள் குறித்து பயிற்சிகள் வழங்கப்படும்.

நிகழ்வில் துறைப் பேராசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் விசன் எம்பவர் நிறுவனங்களைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக அழகப்பா பல்கலைக்கழக சிறப்புக் கல்வி மற்றும் புனர்வாழ்வு அறிவியல் துறைத் தலைவர் பேராசிரியை ஜெ. சுஜாதமாலினி வரவேற்றார். கற்பித்தல் உதவியாளர் பாண்டிமீனாள் நன்றி கூறினார்.

**01-09-2026**





அழகப்பா பல்கலைக்கழகத்தில்

# தேசிய சிறு தொழில்கள் தின சிறப்பு கருத்தரங்கம்




▶ காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் நடந்த கருத்தரங்கில் துணைவேந்தர் (பொ) ஜெயகாந்தன் பேசினார்.

**காரைக்குடி, செப். 1:** காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகமேலாண்மைதுறையின் தளவாட மேலாண்மை துறை சார்பில் தேசிய சிறு தொழில்கள் தின சிறப்பு கருத்தரங்கம் நடந்தது. உதவிப் பேராசிரியர் முனைவர் ராஜன் சின்னா வரவேற்றார். துறைத்தலைவர் பேராசிரியர் சிவக்குமார் நோக்கவுரையாற்றினார். துணை வேந்தர் (பொ) பேராசிரியர் முனைவர் ஜெ.ஜெயகாந்தன் தலைமை வகித்து பேசுகையில், நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்நிறுவனங்களின் பங்கு அதிகம். நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் பங்கு சுமார் 40.0 சதவீதமாக உள்ளது. 2047ம் ஆண்டுக்குள் இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக உருவாக்கும் இலக்கை நாம் அடைய தொழில் வளர்ச்சியில் மத்திய, மாநில அரசுகள் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றன.

மாணவர்களின் தொழில் முனைவோர் சிந்தனைகள் மற்றும் புதிய தொழில் முயற்சிகளை ஊக்குவிக்க பல்கலைக்கழகம் சார்பில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம். அதன் ஒரு பகுதியாக புதுமையான தொழில் யோசனைகளுக்கு பல்கலைக்கழகத்தின் சார்பில் தொழில் தொடங்குவதற்கான ஆரம்பநிதி (சீட் மணி) வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் மாணவர்களுக்கு புதிய தொழில் துவங்க வாய்ப்புகள் உருவாக்கி தரப்படுகிறது. தவிர மாணவர்கள் தங்களது தொழில் முயற்சிகளை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான தொழில் சார் திறன் பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகிறது'' என்றார். தொடர்ந்து இங்கிலாந்து தனியார் நிறுவன மேலாளர் லட்சுமணன் சிறப்புரையாற்றினார். பல்கலைக்கழக மேலாண்மை துறை முதன்மையர் பேராசிரியர் சந்திரமோகன் வாழ்த்துரை வழங்கினார். தளவாட மேலாண்மைத் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் ஆனந்த் நன்றி கூறினார்.

**26-08-2026**

தினகரன்



## அழகப்பா பல்கலைக்கழக

# பொறுப்பு துணைவேந்தர் நியமனம்



▶ பொறுப்பு துணைவேந்தர் முனைவர் ஜெ.ஜெயகாந்தன்.

**காரைக்குடி, ஆக.26:** காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தராக இருந்த பேராசிரியர் முனைவர் ஜி.ரவியின் பணிகாலம் கடந்த 21ம் தேதி முடிவடைந்தது. இதனை தொடர்ந்து மூத்த பேராசிரியர் முனைவர் ஜெ.ஜெயகாந்தன் துணைவேந்தர் பொறுப்பு பேராசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார். பேராசிரியர் ஜெ.ஜெயகாந்தன் பெங்களூரு இந்திய அறிவியல் கழகத்தில் முதுமுனைவர் பட்ட ஆய்வாளராகவும். 2003 முதல் 2010 வரை ஜப்பான் ரிகென் ஹரிமா நிறுவனம் ஸ்பிரிங் 8 ஆய்வகத்தில் ஆராய்ச்சியாளர், தேசிய துகள் முடுக்க கதிர் வீச்சு ஆராய்ச்சி மையம் ஸ்பிரிங் 8 ஜப்பான் ஆய்வகத்தில் ஆராய்ச்சி விஞ்ஞானியாகவும் பணியாற்றியவர். அழகப்பா பல்கலைக்கழகத்தில் 16 ஆண்டுகள் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவராக பணியாற்றி 33 ஆண்டுகள் ஆராய்ச்சி அனுபவத்தை பெற்றவர்.

இவர் கல்வியாளர்களுக்கான தலைமைத்துவ விருது, தமிழ் விஞ்ஞானி விருது, யூஜிஜியின் ஆராய்ச்சியாளர் விருது, முனைவர் பட்ட ஆராய்ச்சியாளர் விருது, இளம் ஆராய்சியாளர் விருதுகளை பெற்றுள்ளார். அழகப்பா பல்கலைக்கழக ஆட்சிக்கு உறுப்பினர், அறிவியல் புல முதன்மையர், பாடத்திட்ட ஆய்வு வாரிய தலைவர், சர்வதேச உறவுகள் மைய இயக்குநர், தரவரிசை பிரிவு இயக்குகுநர்,

இணைவுக் கல்வித்திட்ட இயக்ககத்தின் இயக்குநர், உள்தர மதிப்பீட்டு மைய நோடல் ஆபீசர் போன்ற பல்வேறு நிர்வாகப் பொறுப்புகளை வகித்தவர். தேசிய தர நிர்யக்குழுவின் 2ம், 3ம் மற்றும் 4ம் சுற்றுகளில் முறையை 4க்கு 3.1, 3.64 மற்றும் 3.59 புள்ளிகள் பெற தனது சீரிய பங்களிப்பை வழங்கியுள்ளார். க்யூஎஸ் தரவரிசையில் இப் பல்கலைக்கழகத்தை 500 தரத்திற்குள் மற்றும் டைம்ஸ் ஹையர் எஜிகேசன் தரவரிசையில் 800 _ 1000 தர இடைவெளியில் இடம் பெறச் செய்துள்ளார்.

24-08-2026

# Two senior-most profs appointed interim VCs of Alagappa & MS univs

**Ragu.Raman**@timesofindia.com

**Chennai:** With 12 out of 13 state universities under higher education department without vice-chancellors, Tamil Nadu govt has appointed two senior-most professors in Alagappa University and Manonmaniam Sundaranar University as interim vice-chancellors.

Professor J Jeyakanthan from the department of bioinformatics at Alagappa University has been appointed officiating vice-chancellor of Alagappa University. Professor S Prabahar from the department of English at Manonmaniam Sundaranar University in Tirunelveli has been appointed vice-chancellor (in charge) of the university.

Higher education minister P Viswanathan confirmed appointing interim vice-chancellors to these two state universities.



**AT THE HELM:** Prof S Prabahar and prof J Jeyakanthan

"The extended tenure of these two vice-chancellors ended recently. The acts of these universities say the syndicate will provide requisite arrangement in the absence of vice-chancellors. Till the time the syndicate makes that arrangement, the senior-most professor will discharge the functions and responsibilities of the vice-chancellor. This is just an interim arrangement till that syndicate takes a decision," said a senior official of higher education department.

▶**Senior-most profs, P 7**

**15-08-2026**








# 12258 ஆய்வுகள் மூலம் 79 காப்புரிமைகளை பெற்ற அழகப்பா பல்கலைக்கழகம்

** துணைவேந்தர் ரவி பெருமிதம்*

எழுத்தாளர் **Sivagangai Admin** · 15 ஆகஸ்ட், 2026 2 நிமிட வாசிப்பு

காரைக்குடி, ஆக.14-

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் 12,258 ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டு, 79 காப்புரிமைகளை பெற்றுள்ளது என துணைவேந்தர் பேராசிரியர் ரவி தெரிவித்தார்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் 80-வது சுதந்திர தினவிழாவை முன்னிட்டு, துணைவேந்தர் கர்னல் பேரா. க. ரவி தேசியக்கொடியை ஏற்றிவைத்து பல்கலைக்கழக தேசிய மாணவர் படை பிரிவினர் மற்றும் மாணவ, மாணவியரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

தொடர்ந்து அவர் தனது உரையில்."செயலில் செம்மை" என்ற குறிக்கோளுடன் இயங்கும் அழகப்பா பல்கலைக்கழகம் நாட்டின் கல்வி மற்றும் வளர்ச்சிக்கு தனது சிறப்பான பங்களிப்பை செய்துவருகிறது. தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் பல்வேறு தரவரிசையில் இடம் பெற்றுள்ளது. வளர்ந்து வரும் புதியதுறைகளான "செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல், சைபர் தடயவியல், ஊட்டச்சத்து மற்றும் உணவுமுறை, பாலிமர்வேதியல் மற்றும் உயிர்வேதியியல்" ஆகியவைகளில் புதிய பாடத்திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. 2026 ஆகஸ்ட் நிலவரப்படி அழகப்பா பல்கலைக்கழகம் 12,258 ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டு, 79 காப்புரிமைகளை பெற்றுள்ளது. மேலும் பன்னாட்டு ஆய்விதழ்களில் வெளியிடப்பட்டுள்ள ஆய்வுக்கட்டுரைகளின் வாயிலாக எச் இன்டெக்ஸ் 135 ஆக உயர்ந்துள்ளது. தொழில்முனைவோர் மற்றும் புத்தாக்க மையம் மூலம் புத்தாக்கச் சூழலை வலுப்படுத்தியுள்ளது. பசுமை வளாகத்திட்டத்தின் கீழ் பல்கலைக்கழக வளாகத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் 17000 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன, என்றார்.

இந்நிகழ்வின் ஒரு பகுதியாக முனைவர் பட்டம் பெற்ற துணைப் பதிவாளர் முனைவர்.எம்.முருகேசனுக்கு துணைவேந்தர் பாராட்டுச் சான்றிதழ் வழங்கி கௌரவித்தார். நிகழ்ச்சியில் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர்கள், பேராசிரியர்கள் ஜெ.ஜெயகாந்தன், சி.வேதிராஜன் மற்றும் கே.பாலமுருகன், பதிவாளர் முனைவர்.அ.செந்தில்ராஜன், தேர்வாணையர் முனைவர் எம்.ஜோதிபாசு, நிதி அலுவலர் பேரா.எம்.சந்திரமோகன், தொலைதூரக் கல்வி இயக்குநர் பேரா.எ.கண்ணபிரான், புல முதன்மையர்கள், இயக்குனர்கள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர். உடற்கல்வியியல் கல்லூரி பேராசிரியர்கள் இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

# Alagappa University's research works reach a new high, says VC

**The university's research performance has raised its Scopus H-index from 94 to 135 through 12,118 publications, says Vice-Chancellor G. Ravi during the Independence Day celebrations**

**The Hindu Bureau**
KARAIKUDI

The Alagappa University's research performance had raised its Scopus H-index from 94 to 135 through 12,118 publications, said Vice-Chancellor G. Ravi here on Saturday.

Speaking at the Independence Day celebrations organised on the varsity campus, he said that the rankings in the assessment made by the national and international level ranking agencies such as NIRF, THE and QS had touched a new high that the scholars should be motivated.

He hailed the freedom struggle, the stalwarts responsible for the Independence and described it as something which was not a gift, but earned through sacrifice.

The university should work together to achieve the motto "excellence in action" through offering inclusive education.

Referring to the contributions of Tamil Nadu and the Sivaganga region to the freedom struggle, Prof. Ravi recalled the valour of Rani Velu Nachiyar and the Maruthu Brothers in opposing the British rule.

He said that Jumboo Dweepa Proclamation of the Maruthu Brothers, which called upon the people, irrespective of religion, to resist the British rule, reflected the inclusive idea of a united India and demonstrated their unassailable faith in the concept that diversity and unity have continued in this country for long.



Vice-Chancellor G. Ravi at the Independence Day celebrations at Alagappa University in Karaikudi in Sivaganga district on Saturday. SPECIAL ARRANGEMENT

He further said that nation's strength in 21st century would depend increasingly on current knowledge in science and technology including Artificial Intelligence, semi-conductor, biotechnology, space technology, energy security and cyber security.

Expressing concern over the impact of global warming, the Vice -Chancellor called for collective action on the part of the well-meaning citizens to preserve the pristine nature of the universe.

Planting and protecting trees, conserving energy and water, protecting biodiversity, adopting sustainable consumption, choosing sustainable life style and safeguarding water resources were some of the major tasks to be strengthened for preserving the earth.

The Vice-Chancellor honoured Deputy Registrar M. Murugesan, who obtained Ph.D. degree recently on the occasion.

Syndicate members J. Jayakanthan, C.Vethirajan and K.Balamurugan, Registrar A. Senthilrajan, Controller of Examinations M. Jothi Basu, Finance Officer S. Chandramohan and Director of Distance and Online Programme E. Kannapiran and among other participated.